## மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 600 006

**அனுப்புநர்**

முனைவர்.ரெ. இளங்கோவன்,
இயக்குநர்(பொ),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
பயிற்சி நிறுவனம்,
சென்னை– 600 006.

**பெறுநர்**

இயக்குநர்,
கல்லூரிக் கல்வித்துறை இயக்ககம்,
ஈ.வே.கி. சம்பத் மாளிகை,
டி.பி.ஐ வளாகம்,
சென்னை 600 006.

ந. க. எண்.5077/ ஈ2/2013, நாள். 22.07.2013

**பொருள்** சென்னை 600 006, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் – 2013–14 ஆம் கல்வியாண்டில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சியளித்தல் – பயிற்சிக்குரிய கருத்தாளர்களைப் பரிந்துரைக்க அனுமதி வேண்டுதல் – சார்பு.

**பார்வை** அரசாணை (நிலை) (1டி)எண்.303 பள்ளிக்கல்வி (யு2) துறை, நாள்.23.08.2012

*****

பார்வையில் காண் அரசாணையின்படி பள்ளிக்கல்வித்துறையின் கீழ் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சிகளுக்கும் பொறுப்பு நிறுவனமாக, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை 6 விளங்கி வருகிறது. 2013–14 ஆம் கல்வியாண்டில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி, ஆகஸ்ட், 2013இல் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியை நடத்த தங்கள் இயக்ககத்தின் கீழ், அரசு /அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் கணக்கு, இயற்பியல், ஆங்கிலம், வேதியியல், விலங்கியல், தாவரவியல், வணிகவியல் மற்றும் கணக்குப்பதிவியல் ஆகிய பாடம் சார்ந்த கல்லூரி பேராசிரியர்கள்/உதவிப் பேராசிரியர்கள் மாவட்டத்திற்கு இருவர் வீதம் (32 மாவட்டங்கள் x 2 கருத்தாளர்கள் = 64 நபர்கள்) கருத்தாளர்களாகப் பயன்படுத்த அனுமதி வழங்குமாறும், மண்டல அலுவலர்கள்/ கல்லூரி முதல்வர்களுக்கு தகவல் தெரிவித்தும், இணைப்பில் குறிப்பிட்டுள்ள நாட்களில் பணிவிடுவிப்பு செய்யவும், உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பயிற்சி நடைபெறும் நாள் மற்றும் இடம் சார்ந்த விவரங்கள், இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**இயக்குநர்**

23/7/13

**நகல்**

1. முதன்மைச்செயலர், உயர்கல்வித்துறை. சென்னை–9.
2. முதன்மைச்செயலர், பள்ளிக்கல்வித்துறை. சென்னை–9.
3. இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–6.
4. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
5. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.

# இணைப்பு

## மாநில அளவிலான முதன்மைக் கருத்தாளர்கள் பயிற்சி

இடம்: SIEMAT Conference Hall, DPI Campus,
Chennai-6.

| வ. எண் | பாடம் | பயிற்சி நாள் | மாவட்ட அளவிலான பயிற்சிக்கு முதன்மைக் கருத்தாளர்கள் (பேராசிரியர்/உதவி பேராசிரியர்) எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கணக்கு | 30.07.2013 | 2 |
| 2. | இயற்பியல் | 31.07.2013 | 2 |
| 3. | ஆங்கிலம் | 02.08.2013 | 2 |
| 4. | வேதியியல் | 03.08.2013 | 2 |
| 5. | தாவரவியல் | 05.08.2013 | 2 |
| 6. | விலங்கியல் | 06.08.2013 | 2 |
| 7. | வணிகவியல் / கணக்குப்பதிவியல் | 07.08.2013 | 2 |
| மொத்தம் | | | 14 |